5

# நெருப்புக் காய்ச்சல்...

# மலேரியா...

# டெங்கு...

# பற்றித் தெரிந்துகொள்வோம்

யாழ். பல்கலைக்கழக
சமுதாய மருத்துவத்துறையின்
வெளியீடு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின்
உதவியுடன் வெளியிடப்படுகிறது

# நெருப்புக் காய்ச்சல்

சல்மொனெல்லா ரைஃபி (*Salmonella typhi*) எனும் பக்றீரியாவால் ஏற்படுகின்றது

- நோயாளி ஒருவரின் மலம், சிறுநீரால் அசுத்தமாக்கப்பட்ட உணவாலும் நீரினாலும் எமக்குத் தொற்றுகிறது


## ஆரம்ப அறிகுறிகள்

- தொடர்ச்சியான காய்ச்சல்
- கடுமையான தலைவலி
- மலச்சிக்கல்
- உடல்வலி
- மூட்டுவலி

இவற்றைக் கவனித்து மருந்து எடுக்காவிட்டால்

## பின்வரும் சிக்கல்கள் ஏற்படும்

- குடலில் துவாரங்கள் ஏற்படல்
- குடலிலிருந்து மலத்துடன் குருதி வெளியேறுதல்
- இரத்தத்தில் தொற்று
- சிறுநீரகத் தொற்று



வீட்டு ஈ நோய்த் தொற்றலுக்கு பெரிதும் உதவுகிறது.


# நெருப்புக் காய்ச்சலைத் தடுப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியவை

- கொதித்தாறிய நீரை அருந்துங்கள்

- கிணற்றிற்கு சரியான முறையில் குளோரின் இடுங்கள்

- இயலுமானவரை வெளியிடங்களில் உணவு உண்பதைத் தவிருங்கள் (உ-ம்: ஐஸ்கிறீம்)

- உணவுகளை ஈக்களிடம் இருநது பாதுகாத்து வையுங்கள்



- உணவை உண்ண முன்னரும் மலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரத்தால் கழுவுங்கள்




- நெருப்புக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பின் தகுதி வாய்ந்த வைத்தியரின் உதவியை நாடுங்கள்

- நீங்களாகவே மருந்து எடுப்பதைத் தவிருங்கள்

- நோயாளியிலிருந்து விலகி இருங்கள்

- வெளியிடங்களில் மலம், சலம் கழிப்பதை தவிர்த்து மலசல கூடங்களைப் பாவியுங்கள்



**காய்ச்சல் ஏற்பட்டு குணமடைந்த நோயாளிகளில் 5-10% ஆனவர்கள் தம் மலத்துடன் பற்றீரியாவை வெளியேற்றுகின்றனர்**

**எனவே காய்ச்சல் மாறிவிட்டது என அலட்சியமாக இராதீர்கள்**

# நினைவில் வைத்திருக்க வேண்டியவை



அழுக்கடைந்த நீரால் நெருப்புக் காய்ச்சல் விரைவாகப் பரவுகின்றது



சனநெரிசல் அதிகமுள்ள, சுகாதாரம் குறைந்த இடங்களில் விரைவாகப் பரவுகின்றது

# மலேரியா காய்ச்சல்

- தற்போது சூடானாட்டில் காணப்படும் காய்ச்சல் களில் முக்கியமானதொன்று

- பிளாஸ்மோடியம் (*Plasmodium*) எனப்படும் ஒரு வகை ஒட்டுண்ணியால் ஏற்படுகின்றது

- இவ் ஒட்டுண்ணியை அனோ.:.பிலிஸ் *(Anopheles)* எனும் நுளம்பு பரப்புகின்றது

## அனோஃபிலிஸ் நுளம்பை அடையாளம் காணுங்கள்



ஓய்வு நிலையில் தலை, நெஞ்சு, வயிற்றுப்பாகம் ஒரே நேர் கோட்டில் உடலுடன் $45^0$ யில் காணப்படும்

- இந்த வகை நுளம்பு பொதுவாக மனிதனை பிற்பகலிலும் இரவிலும் கடிக்கும்

# நோயின் பொதுவான அறிகுறிகள்

## பிளாஸ்மோடியம் வைவக்ஸ் மலேரியா

- காய்ச்சல் ஒவ்வொரு 48 மணித்தியாலத்திலும் உச்சநிலை அடையும்
- மூன்று நிலைகள் உடையது

## முதலாவது குளிர் நிலை

- 30 நிமிடம் முதல் ஒரு மணித்தியாலம் வரை நீடிக்கும்
- தலைவலி, வயிற்றுபிரட்டு, வாந்தி, நாரிநோ, குளிருடன் கூடிய நடுக்கம் என்பன காணப்படும்

## இரண்டாவது சூடான நிலை

- 4 மணித்தியாலங்கள் நீடிக்கும்
- காய்ச்சல் விரைவாக உச்சநிலை அடையும்

## மூன்றாவது வியர்க்கும் நிலை

- அதிகளவு வியர்க்கும்
- உடல் வெப்பநிலை சாதாரண நிலையை அடையும்

## *பிளாஸ்மோடியம் பல்சிபாரம் மலேரியா (மூளை மலேரியா)*

- தலைவலி, இடுப்புவலி, வாந்தி அதிகமாக இருக்கும்
- காய்ச்சல் ஒழுங்கற்று அதியுயர் வெப்பநிலையை அடையும்
- காய்ச்சல் விட்டு விட்டு வருவதுடன் ஒருநாளில் சில மணித்தியாலங்கள் காணப்படும்
- குளிர், வெப்ப, வியர்க்கும் நிலைகளை தெளிவாக வேறுபடுத்த முடியாது

மூளை மலேரியாவில் பின்வரும் கடுமையான

### *சிக்கல் நிலைகள் காணப்படும்*

- மயக்கம்
- வலிப்பு
- ஈரல் செயலிழப்பு
- குருதிச்சுற்றோட்ட நிறுத்தம்
- கடுமையான காய்ச்சல்
- சிறுநீரக செயலிழப்பு

இவை இறப்பிற்கு வழிகோலும்

## நீங்கள் செய்ய வேண்டியவை

- பூச்சி நாசினியை வீட்டுசுவர்களிலும் கூரையிலும் விசிறலாம்
- நுளம்பு விருத்தியாவதை, கடிப்பதைத் தடுக்கலாம்
- நோய் ஆபத்து கூடிய இடத்தில் வசித்தால் வைத்திய நிலையம் சென்று இரத்தப் பரிசோதனை செய்யலாம்
- மலேரியா பரவலாகக் காணப்படும் இடத்திற்கு செல்பவர்கள் வைத்தியர் ஆலோசனையுடன் முற்காப்பு மருந்து எடுக்கலாம்
- நோய் தொற்றினால் சிபாரிசு செய்யப்படும் மருந்துகளை பூரணமாக எடுங்கள்


**கர்ப்பகாலத்தில் ஏற்படும் மலேரியா தாயிலும் கர்ப்பத்திலும் அதிகளவான பாதிப்பை ஏற்படுத்தும்**

# டெங்கு காய்ச்சல்

அண்மையில் புத்தளத்தில் பலரின் உ[illegible] இக் காய்ச்சல் பறித்ததை அறிந்திருப்பீர்கள். இங்கு கூட பலரை இது பாதித்துள்ளது.

- இது வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது
- ஈடிஸ் *(Aedes)* எனும் நுளம்பு இனத்தால் பரப்பப்படுகின்றது

## ஈடிஸ் நுளம்பை அடையாளம் காணுங்கள்



நுளம்பு சாதாரணமாக பகலில் 6-8 மணி வரையிலும் மாலையில் 4-7 மணி வரையிலும் மனிதரைக் கடிக்கும். நுளம்பின் உடம்பில் கறுப்பு வெள்ளை அடையாளங்கள் காணப்படும்

## சாதாரண டெங்கின் அறிகுறிகள்

- சடுதியான காய்ச்சல்
- கடுமையான தலையிடி
- கண்ணிற்கு பின்னால் நோ
- தோலின் கீழ் சிவந்த புள்ளிகள்

4-5 நாளில் இவை தணிந்து நோய் குணமாகும் அல்லது சிலருக்கு அடுத்த நிலையான குருதிப் பெருக்கு நிலைக்கு இட்டுச் செல்லும்.

## குருதிப்பெருக்கு டெங்கு நிலையில்

- மூக்கால் குருதி வெளியேறும்
- முரசால் குருதி வெளியேறும்
- குடல் மூலம் குருதி வெளியேறும்
- சிறுநீர்,மலம் மூலம் குருதி வெளியேறும்
- மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறும்


சிலருக்கு இந்நிலையைத் தொடர்ந்து

## குருதிச் சுற்றோட்ட அதிர்ச்சி டெங்கு உண்டாகும்.

இதன் போது,

- உடல் குளிருதல்
- வாயைச் சுற்றி நீலநிறமாதல்
- மூச்சுவிட சிரமப்படுதல்
- நாடித்துடிப்பு அதிகரித்தல் என்பன காணப்படும்.

தீவிர மருத்துவ சிகிச்சை அளிக்காவிடில் 12-24 மணித்தியாலத்தில் இறப்பு ஏற்படும்.



**மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்தியசாலையை நாடுங்கள்.**

## நுளம்பால் பரப்பப்படும் டெங்கு, மலேரியாவை எவ்வாறு தடுக்கலாம்?

### நுளம்பு விருத்தியாவதைத் தடுப்போம்

- இவை நீரிலேயே முட்டைகளை இடுகின்றன. எனவே நீர் தேங்காது தடுங்கள்

- சிறுகுட்டைகள், கால்வாய்கள், பாத்திரங்கள், ரின்கள், பானைகள், சட்டிகள், பூச்சாடிகள், மரப்பொந்துகள், தாழ்வாரப் பீலிகள் என்பவற்றில் நீர் தேங்காது தடுங்கள்

### நுளம்பு தங்கும் இடங்களை அகற்றுவோம்

- பற்றைகள், புல்பூண்டுகளை அழியுங்கள்



- குப்பை கூழங்களைப் புதையுங்கள் அல்லது எரியுங்கள்
- ஆட்களற்ற அயல் வீடுகளில் உள்ள வெற்றுக் காணிகளைத் துப்பரவு செய்யுங்கள்

## • நுளம்பு கடிக்காமல் தடுத்தல்

- நுளம்புச்சுருள், நுளம்பு வலை பாவித்தல்
- வீட்டு யன்னலுக்கு நுளம்புகள் புகமுடியாமல் வலை அடித்தல்
- நீளமான உடைகள், காலுறைகள் அணிதல்
- நுளம்பு அதிகளவில் கடிக்கும் நேரங்களில் வெளியில் நிற்பதைத் தவிர்த்தல்

வெளியீடு:
சுகாதார கல்விசார் தயாரிப்பலகு
சமுதாய மருத்துவததுறை.
யாழ பல்கலைக்கழகம்.
2003

தயாரிப்பு உதவி
வே.பவந்தன்
மருத்துவ மாணவன்
(98 / FM / 05) (4ம் வருடம்)

ராம் பிறின்ரேஸ் 51,இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.